# ★ அம்பாறை வயலில் 6 தமிழர் சுட்டுக்கொலை

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 18 இதழ் 19
யாழ்ப்பாணம் திங்கிழமை 01 – 03 – 1993

(மட்டக்களப்பு) மட்டக்களப்பு மாவட்டம் திகிலவெட்டையைச் சுற்றி வளைத்த ஸ்ரீலங்கா இராணு வத்தினரும், தேச விரோதக் கும்பலும் வயலில் வேலை செய்துகொண்டிருந்த 6 தமிழ் (4-ம் பக்கம் பார்க்க)

## மட்டு. மூதூரில் மூன்று தமிழர் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு) மட்டக்களப்பு மகிழவெட்டு வான் பகுதியில் கடந்த 21ம் திகதி ஸ்ரீலங்கா இராணு வத்தினர் மேற்கொண்ட துப் பாக்கிப் பிரயோகத்தில் நல்ல ரத்தினம் (வயது 35) வந்தாறு 4-ம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதி தேர்தலை ஜூனில் நடத்த முயற்சி

(கொழும்பு) எதிர்க்கட்சிகளுக்கிடையில் பிளவு ஏற்பட்டு வருவதால் ஜனாதிபதித் தேர்தலில் பிரேம தாசாவிற்கு வெற்றி வாய்ப்பு கள் இருப்பதனால் எதிர்வரும் ஜூன் மாதத்தில் இத்தேர்தலை (4-ம் பக்கம் பார்க்க)

## ● பாக்குநீரிணை கூட்டுரோந்து

# பாதுகாப்பிற்கு இரு ஒப்பந்தம்

# இந்தியா - இலங்கை உடன்பாடு!

### அமைச்சர் தினேஸ்சிங் வருகிறார்

(கொழும்பு)

பாக்கு நீரிணை கடற்பரப்பில் இலங்கை - இந்திய கடற்படையினர் இணைந்து கூட்டுரோந்து நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக விரைவில் இருநாடுகளும் இரு புதிய ஒப்பந் தங்களில் கைச்சாத்திடவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவின் புதிய வெளி யுறவு அமைச்சர் திரு. தினேஷ் சிங் எதிர்வரும் மேமாதம் கொழும்புக்கு விஜயம் செய்த பின்னர் இந்த இரு ஒப்பந்தங் களும் கைச்சாத்திடப்படவுள் ளதாகவும் தெரிவிக்கப்படு கிறது. (4-ம் பக்கம் பார்க்க)

## வவுனியா பகுதியில் 'பாதுகாப்புவலயம்'

(வவுனியா) வவுனியாவில் இராணுவத் தினரின் கட்டுப்பாட்டில் உள்ள இடங்களில், இராணு வத்தினரின் பாதுகாப்புக் கருதி 72 சதுர கிலோ மீற்றர் பகுதி 'பாதுகாப்பு வலயமா கப் பிரகடனம் செய்யப்பட் டுள்ளது.

இதேவேளை வவுனியாவுக் குச் செல்லும் சகலரையும் இராணுவத்தினரும், பொலி ஸாரும் தீவிரமாகக் கண் காணித்து வருவதாகத் தெரி விக்கப்படுகிறது.

இப்பகுதிக்குப் புதியவர் ஒரு வர் வந்தால், அவர் மீது தீவிர சோதனை நடவடிக்கை களைப் படையினர் மேற் கொண்டு வருகின்றனர். (பி-சி)

## அம்பாறையில் கடும் மோதல் படையினருக்குப் பலத்த இழப்பு

(மட்டக்களப்பு) அம்பாறை மாவட்டம் தங்கவேலாயுதபுரத்தில் வற்கடமையில் ஈடுபட்டி ருந்த விசேட அதிரடிப்படை யினர் மீது நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் மேற் கொண்ட தாக்குதலில் விசே- அதிரடிப்படையினர் தரப்பி பலத்த சேதம் ஏற்பட்டுள் ளது.

நேற்று முன்தினம் காலை 11 மணியளவில் இடம்பெற்ற மேற்படி தாக்குதல் சுமார் 20 நிமிடங்கள் வரையில் நீடித் தது.

### புலிகள் வீரச்சாவு

(மட்டக்களப்பு) அம்பாறை தங்கவேலாயுத [புரத்தி]ல் விசேட அதிரடிப் [படையி]னருடனான மோதலில் அம்பாறை பொறுப்பாளர் மேஜர் ராஜேஸ் (செல்வ ராசா குவேந்திரராசா திருக் (4-ம் பக்கம் பார்க்க)

தங்கவேலயுதபுரத்திற்கு ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ மேற்கொள்ளவிருந்த விஜயத் (4-ம் பக்கம் பார்க்க)

## லக்திவ - புலிகள் கூட்டில் உண்மையில்லை

(கொழும்பு) விடுதலைப் புலிகளையும் 'லக் திவ' பத்திரிகையையும் தொடர்புபடுத்தி வெளிவந்த செய்தியில் உண்மை இல்லை என்று லக்திவ பத்திரிகை ஆசிரியர் தெரிவித்துள்ளார். லக்திவ பத்திரிகையை நிறுத்துவதற்கு ஜே. வி. பி. (4-ம் பக்கம் பார்க்க)

## நீரில் மூழ்கி சகோதரர்கள் பலி

(யாழ்ப்பாணம்) வட்டுக்கோட்டை சங்கரத் தையில் வயலில் மாடுமேய்த் துக்கொண்டிருந்த இரு சகோ தரர் இருவர்கள் விளையாடிக் கொண்டிருந்தவேளையில் தவ றுதலாக வயற்பரப்புக்குளத் (4-ம் பக்கம் பார்க்க)

## தெரிவுக்குழுவின் அறிக்கை அடுத்த மாதம் வெளியாகும்

(மதுரை) [இலங்]கை இனப்பிரச்சினைக்கு [தீர்வு கா]ணும் முகமாக் நிய[மிக்கப்ப]ட்ட பாராளுமன்ற [தெரிவுக்] குழு தனது இறுதி [அறிக்]கையை அடுத்த மாதம் [சமர்ப்]பிக்கவுள்ளதாக இந்[திய] ராஜாங்க அமைச்சர் [ஆர்]. பி. தேவராஜ் தெரி[வித்த]ார்.

[தமி]ழகத்துக்கு விஜயம் [செய்]த திரு. தேவராஜ் [...]வில் பத்திரிகையாளர் [...] இதனைத் தெரிவித் தார். அவர் மேலும் தெரிவிக் கையில்:

இலங்கையில் விடுதலைப் புலி களைத் தவிர வேறு எந்த அமைப்பும் தமிழீழத்தை (4-ம் பக்கம் பார்க்க)

### தெரிவுக்குழுவிற்கு உதவ பிரேமா வேண்டுகோள்

(கொழும்பு) வடக்கு-கிழக்குப்பிரச்சினையை தீர்ப்பதற்கு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு ஒத்து ழைப்பு வழங்குமாறு ஜனாதி பதி ஆர். பிரேமதாசா, தமிழ் முஸ்லிம் ஸ்தாபனங்களிட (4-ம் பக்கம் பார்க்க)

## ★ பூநகரிப் பாதை விவகாரம்: யு.என்.எச்.சி.ஆர். அதிகாரி மீண்டும் யாழ். வருகிறார்

(கொழும்பு) கேரதீவு - சங்குப்பிட்டிப் பாதை விவகாரம் தொடர் பாக மீண்டும் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்து வதற்கு யு. என். எச். சி. ஆர். அதிகாரி ஒருவர் விரை (4-ம் பக்கம் பார்க்க)

[வாடிக்கை]யாளர்கள் !!!
[க]வனமாக இருக்கவும் - - -!
எந்த இடத்திலும்,
[...]எட்டப்பன் நிற்பான்!
கண்டபடி கதைக்காதீர்.

## கிளாலிப் பாதை தொடர்ந்து தடைசெய்யப்பட்டிருக்கும்

### கடற்படை பலம் அதிகரிப்பு

(கொழும்பு) கிளாலி கடலேரிப் பகுதி பொதுமக்களின் பயணத் திற்கு தொடர்ந்தும் தடை செய்யப்பட்டிருக்கும் என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பாதுகாப்பு காரணங்களை முன்னிட்டே இப்பாதையில் எவரும் பயணம் செய்யக் கூடாதென தடை விதிக்கக (4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்


### PITAWAKKA PLUS

மதுபானத்தால் ஏற்படும் ஈரல் வியாதிகளுக்கும் வேறு மருந்துகளால் உடலில் ஏற்படும் நச்சுத்தன்மைகளுக்கு மாக 9 வகை மூலிகைகள் அடங்கியது. கிடைக்குமிடம், எஸ். ரி மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-7180)

### போத்தல்கள் தேவை

ஜாம், பியர், கோடியல் போத்தல்கள் தொடர்ந்து எம்மால் கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றது. Taste Line Industries (PVT) Ltd No-14, Seenier Lane, Jaffna.

(ஏ-2918)


## 'சிரித்திரன்' வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

'சிரித்திரன்' தை, மாசி, மாதங்களுக்குரிய நகைச்சுவை மாத இதழ் வெளிவந்துள்ளது.

இவ்விதழில் நகைச்சுவைத் துணுக்குகள், சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள் போன்றவற்றுடன் முகமுறுவல், பின் சிரிப்பு, மகுடி பதில்கள் போன்றவையும் இடம் பெற்றுள்ளன.

## சனசமூக நிலைய ஆண்டு விழா

(புலோலி)

பொலிகண்டி அம்பிகை சனசமூக நிலைய 15ம் ஆண்டு நிறைவுவிழாவும் புதிய கட்டடத் திறப்புவிழாவும் சனசமூகநிலையத் தலைவர் திரு. க. ஜெயச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. விழாவை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் திரு. எழில், பருத்தித்துறை பிரதேச சபைச் செயலாளர் திரு. சட்ட. செவ்வந்திநாதர் ஆகியோர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். சனசமூக நிலையத்தின் புதிய கட்டிடத்தை விடுதலைப்புலிகள் வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. அ. சண்முகநாடாவை வெட்டித் திறந்துவைத்தார். (ச2)

## கூட்டுறவுச் சபையின் சர்வதேச மகளிர் தின போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச்சபையின் மாவட்ட மட்ட மகளிர் குழு நடாத்தும் சர்வதேச மகளிர் தின விழாவை யொட்டி மேற்படி மாணவர்க்கான கட்டுரை, பேச்சுப் போட்டிகள் யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெற்றது. அவற்றில் பேச்சுப் போட்டியின் வெற்றியீட்டியோர் விபரம் வருமாறு.

கீழ்ப் பிரிவு:

இதளமியன் (யாழ். பரி. யோவான் கல்லூரி), யோகேஸ்வரன் திவாகர் (மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை), ம. பிரவீணன் (மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை)

மத்திய பிரிவு:

எஸ். கோகுலன் (யாழ். பரி யோவான் கல்லூரி), ரி தயாழினி (யாழ். இந்து மகளிர் கல்லூரி), ஆர். சஜீசன் (யாழ். பரி. யோவான் கல்லூரி).

மேற் பிரிவு:

சி. விஜேந்தினி (மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை), விரவிகம் ரவீந்திரன் (மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை) கி. உமாசங்கர் (யாழ். பரி. யோவான் கல்லூரி)

## கால்நடைகளில் கால்வாய் நோய்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சிப் பகுதியில் கால்நடைகளுக்கு [illegible] மாடுகளுக்கு) கால்வாய் நோய் கூடுதலாகப்பரவி வருகின்றது. இந்த நோய்க்கென பாவிக்கப்படும் எவ். எம். டி. மருந்தும் தட்டுப்பாடாக உள்ளமையால் கால்நடை வளர்ப்பவர்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகி வருகிறார்கள்.

தடுப்பூசி 6 மாத இடைவெளியில் இருந்து ஆறுமாதத்திற்கு ஒரு தடவை போட்டு வந்தால் இந்த நோய் ஏற்படாதவாறு தடுக்கலாம்.

இந்த நோயினால் ஏற்பட்ட காயத்தினை உப்பு நீரால் கழுவிய பின்னர் சல்பொக்கொம்தார் ஒரு பங்கு, வேப்பெண்ணை 4 பங்கு, தேங்காய் எண்ணெய் 5 பங்கு கலந்த கலவையை தொடர்ந்து பூசி வந்தால் குணப்படுத்தலாம் எனவும், கால்நடை வளர்ப்பாளர்கள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகம் தொடர்புகொண்டு உள்ளது.

## புனரமைப்பு கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சரவணை மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புனரமைப்புக் கூட்டம் அண்மையில் உதவி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சு. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

தலைவராக நா. சின்னராசா வும், செயலாளராக நீ. யேசுரட்ணமும் பொருளாளராக ம. சுந்தையாவும் தெரிவுசெய்யப்பட்டனர். சு)

## இராசி பலன்

01-03-1993

திங்கட்கிழமை

(தமிழுக்கு மாசி 18)

அட்டமி பி. 4-26 வரை ரோகினி பி. இ. 3-50 வரை, அமிர்தயோகம் இராகுகாலம் காலை 7-58 முதல் 9-28 வரை, சுபநேரம் நண்பகல் 12-28 முதல் 1-58 வரை.

மேடம்: மருத்துவ செலவு, மனக்கசப்பு சுபவிரயம்.

இடபம்: திடீர் நன்மை, கற்றவர்கள் பாராட்டு, காரிய சித்தி

மிதுனம்: உடலில் தொல்லை பணவிரயம், அலைச்சல்.

கடகம்: காரிய அனுகூலம், தொழில் லாபம், புதிய நட்டம்

சிங்கம்: பிரச்சினைக்கு தீர்வு, பயணம், காரிய வெற்றி.

கன்னி: நரம்புக் கோளாறு, நண்பர் பகை, முன்கோபம்.

துலாம்: குடும்ப சிக்கல், வீண் பகை, உஷ்ண வியாதி.

விருச்சிகம்: புதிய வரவு, ஆபத்தில் தப்புதல், பண வரவு.

தனுசு: கருத்து வேறுபாடு, பலருடைய உதவி, பாராட்டு

மகரம்: பிரச்சினை, கடன் தொல்லை, தொழில் நஷ்டம்

கும்பம்: புத்தி தடுமாற்றம், உறவினர் தொல்லை, பணமுடை.

மீனம்: அறிஞர் நட்பு, சுப நிகழ்ச்சி, சகோதரர் உதவி.

சோதிடர்

## இன்று

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் சுகாதார செயற்குழுக் கூட்டம் இன்று மார்ச் முதலாம் திகதி திங்கட்கிழமை காலை 10-30 மணிக்கு சுன்னாகம் பொதுசன நூலக மண்டபத்தில் வலிகாமம் தெற்கு பிரதேச செயலாளர் செல்வி இ. தணிகாசலம் தலைமையில் நடைபெறுகின்றது (109)

★

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை சர்வோதயச் சிறுவர்களின் ஆத்திசூடி முற்றோதல் விழா இன்று 01-ம் திகதி தொடக்கம் 10-ம் திகதி வரை கொழும்புத்துறை யோகர் சுவாமி மகளிர் ஆச்சிரமத்திலுள்ள ஔவையார் பந்தலில் நடைபெறும்.


## யா/ வைத்தீஸ்வரக் கல்லூரி பரிசளிப்பு விழா

காலம்: 01-03-1993 திங்கட்கிழமை பி. ப. 3. 30 மணி

இடம்: கல்லூரி விவேகாநந்த மண்டபம்

முதன்மை விருந்தினர்

திரு. இரா. சுந்தரலிங்கம் அவர்கள்

யாழ் பிரதேசக் கல்விப் பணிப்பாளர்

சிறப்பு விருந்தினர்

திரு. சி. வேலாயுதம் அவர்கள்

பிரதிக் கல்விப் பணிப்பாளர் - யாழ். கோட்டம்

பரிசில் வழங்குநர்

திரு. அ. பஞ்சலிங்கம் அவர்கள்

அதிபர், யாழ். இந்துக் கல்லூரி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அதிபர், ஆசிரியர், மாணவர்

யா/ வைத்தீஸ்வரக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.
21-02-1993 (எ 2920)


## 31—ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு: 18 - 12 - 1918

உதிர்வு: 30 - 01 - 1993

### திருமதி மரகதம் வல்லிபுரம்

(நாரந்தனை மேற்கு — ஊர்காவற்றுறை)

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து அன்போடும், பண்போடும், பாசத்தோடும் எங்களை வளர்த்து, உற்றாரையும் மற்றோரையும் அணைத்தும், அரவணைத்தும், நேசித்தும், நல்வழி காட்டி எம்மைப் பாரினில் வளர்த்த அன்புத்தெய்வமே! காலமும் காலனும் உங்களை எம்மிடமிருந்து பிரித்தாலும் எம் இதயங்களில் நிலையாக நிற்கும் உங்கள் நினைவு மாறாது.

ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

30-1-93 இறையடி சேர்ந்த எமது அன்புத் தாயின் இறுதிக் கிரியைகளில் பங்குபற்றியும் இறுதி அஞ்சலி செலுத்தியும் எமது ஆறுதலைப் பங்கு கொண்டு எமக்கு ஆறுதல் கூறியோருக்கும் மற்றும் சகல வழிகளில் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,
மற்றும் குடும்பத்தினர்.

வ. சதானந்தன் (மகன்)
25, பேரின்பநாயகம் ஒழுங்கை,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். (சி-7273)





(எ-2922)

யாழ்ப்பாணம்

### நுணுவில் டயர் தொழிற்சாலை குடியிருப்பில்

# போஷாக்கு உணவின்றி அதிகமானோர் பாதிப்பு

(சாவகச்சேரி)

கைதடி நுணுவில் டயர் தொழிற்சாலை குடியிருப்பு முகாமிலுள்ளவர்களில் குழந்தைகள், பெண்கள், உட்பட நூற்றுக்குமதிகமானவர்கள் போஷாக்கு உணவின்மையால் பெரும் பாதிப்படைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

25க்கு மேற்பட்ட பாலூட்டும் தாய்மார்கள், 100 இருவர்கள், 8 கர்ப்பிணித் தாய்மார்கள் போன்றவர்களே போஷாக்கு உணவின்றி பாதிக்கப்பட்டிருப்பதாக அண்மையில் இங்கு மேற்கொள்ளப்பட்ட புள்ளிவிபர கணக்கெடுப்பு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவ தாக்குதல் உட்பட மற்றும் பல காரணங்களினால் இந்தக்குடியிருப்பிலுள்ள பெண்களில் 45 பேர் தமது கணவன்மாரை இழந்து விதவைகளாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் இங்குள்ளவர்களின் உறவினர்களில் 6 பேர் இராணுவத்தினரின் பிடியில் அவர்களது சொந்த இடங்களில் சிக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சங்கானை சைவப்பிரகாச மகாவித்தியாலயம், மானிப்பாய் பாத்திமா தேவாலயம் ஆகிய பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்து தஞ்சமடைந்திருந்த சுமார் 300 குடும்பங்களுக்கு யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தினரால் கைதடி நுணுவில் டயர் தொழிற்சாலை வளவில் குடிசைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளதுடன் புதிய குடியிருப்பு ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது.

கடந்த அக்டோபர் மாதத்திலிருந்து கட்டம் கட்டமாக இக்குடிசைகள் அமைக்கப்பட்டு இடம்பெயர்ந்தோரிடம் தற்பொழுது முழுமையாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சுமார் 60 ஏக்கர் நிலப்பரப்பில் உருவாக்கப்பட்டுள்ள இக்குடியிருப்பில் உள்ள மாணவர்கள் பலர் உடுப்புகள், மற்றும் கல்வி உபகரணங்கள் இல்லாத நிலையில் பாடசாலை செல்ல முடியாத நிலையிலுள்ளனர். தற்பொழுது பாலர் பாடசாலை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இக்குடியிருப்பிலுள்ளவர்களில் அதிகமானோர் விவசாயம், மீன்பிடி, சீவல், கூலி போன்ற தொழில்களையே செய்தவர்கள் தற்போது தொழில் எதுவுமின்றி இருக்கிறார்கள். அத்துடன் இளைஞர்கள் பலரும் தொழில் எதுவுமின்றி இருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இங்கு அமைக்கப்பட்டுள்ள குடிசைகளுடனான தொடர்பை இலகுபடுத்துவதற்காக ஏ. பி. சி. டி என பிரித்து இலக்கமிடப்பட்டு 25 குடிசைகளுக்கு 2 தொண்டர்களும் ஒரு தலைமைத் தொண்டரையும் இரண்டு உதவியாளர்களையும் குடிசைகளுக்கு பொறுப்பாக நியமித்துள்ளார்கள்.

300 குடும்பங்களைச் சேர்ந்த 1575 பேர் அடங்கியுள்ள இந்த குடியிருப்பில் மருத்துவ சேவையை செஞ்சிலுவைச் சங்கத்தின் நடமாடும் வைத்திய பிரிவினரும், ஹோலிக் குரோஸ் மருத்துவநிலையமும் கவனித்து வருகின்றன. (155 தீ)

## இரவு வேளைகளில்! நெற்கதிர் திருட்டு

(திருநெல்வேலி)

இரவு வேளைகளில் வயல்களில் நெற்கதிர்கள் களவாக அறுவடை செய்யப்படுகின்றன.

அண்மையில் செம்மணிப் பகுதியிலும், இரு வயல்களில் உள்ள நெற்கதிர்கள் முற்றாக அறுவடை செய்யப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

கரவெட்டிப் பகுதியிலும் இதேபோன்ற சம்பவங்கள் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. (527)

## உதைபந்தாட்ட கழகங்களை பதிவுசெய்ய நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

இதுவரை யாழ். மாவட்ட அபிவிருத்தி சபையில் பதிவு செய்யப்படாத யாழ். மாவட்டத்திலுள்ள உதைபந்தாட்டக் குழுக்கள் உள்ள கழகங்கள் மார்ச் 15ம் திகதிக்குமுன்னர் தங்கள் பதிவுகளை பதிவு செய்யும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

விண்ணப்பப் படிவங்களை அவ்வவ் பிரதேச விளையாட்டுப் பொறுப்பாளர்களிடமும் கோட்டங்களுக்காக நியமிக்கப்பட்ட பிரதிநிதிகளிடமும் பெற்றுக்கொள்ளலாம். தென்மராட்சிக் கோட்டம் திரு. வே. சுந்தரலிங்கம், மட்டுவில் மகாவித்தியாலயம், தீவகக் கோட்டம் திரு. ஐ. சண்முகநாதன், யூனிவேசல் சுந்தரி மடம் ஆகியோரிடம் பெற்றுக் கொள்ளலாம் என யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (கி)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ் வைத்தீஸ்வரக் கல்லூரி பரிசளிப்பு விழா இன்று 1ம் திகதி திங்கட்கிழமை பி.ப. 3-30 மணிக்கு கல்லூரி விவேகானந்த மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முதன்மை விருந்தினராக யாழ். பிரதேச கல்விப்பணிப்பாளர் இ. சுந்தரலிங்கமும், சிறப்பு விருந்தினராக யாழ். கோட்ட பிரதிப் பணிப்பாளர் ரி. வேலாயுதமும் பங்குபற்றவுள்ளனர்.

யாழ். இந்துக் கல்லூரி அதிபர் அ. பஞ்சலிங்கம் பரிசில்கள் வழங்கவுள்ளார். (சு)

### இரண்டு லட்சம் ரூபா பொருள்கள் கடத்த முனைந்த

# இராணுவ மேஜர் ஒருவர் தாண்டிக்குளத்தில் கைது!

(கொழும்பு)

வடபகுதிக்கு இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான வாகன உதிப்பாகங்களை எடுத்துச்செல்ல முனைந்த ஒருவருக்கு உதவியதற்காக வன்னி இராணுவ முகாமைச் சேர்ந்த மேஜர் ஒருவரை இராணுவப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

தனது வாகனத்தில் இப்பொருள்களை தாண்டிக்குளம் தடைமுகாம்வரை எடுத்து வந்த இவர் அங்கு காத்து நின்ற சிவிலியன் ஒருவரிடம் அவற்றை கையளிக்க முனைந்தபோது இராணுவ பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்ட இந்த இராணுவ மேஜர் விசாரணை செய்யப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (ரி)

## பரிசளிப்பு... போட்டி முடிவுகள்

(அச்சுவேலி)

அச்சுவேலி கொத்தணிப் பாடசாலைகள் மத்தியில் நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டிகள் கொத்தணி அதிபர் திரு. எஸ். செல்லையா தலைமையில் அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

போட்டிகளில் வெற்றி பெற்று கோட்ட மட்டத்திலான போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்ட அணிகள் விபரம்:

19 வயது பெண்கள் – அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி.

17 வயது பெண்கள் – அச்சுவேலி மகாவித்தியாலயம்.

15 வயதுப் பெண்கள் அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி

15 வயது ஆண்கள் அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை.

17 வயது ஆண்கள் அச்சுவேலி மகாவித்தியாலயம்.

மருதனார்மடம் கல்விக் கோட்ட மட்டத்திலான உடற்பயிற்சிப் போட்டிகள் நாளை 0.. ம் திகதி நடைபெறும்.

## குண்டுவெடிப்பில் 12 பேர் காயம்

(லண்டன்)

லண்டனில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவமொன்றில் 12 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

லண்டன் நகரத்தின் வடபகுதியிலுள்ள சந்தைப் பகுதியிலே இந்தக் குண்டு வெடித்ததாக தெரிவிக்கப்படுகிறது. (ரி)

## விஞ்ஞான, கணித பொருட்காட்சி

(அளவெட்டி)

யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் கடந்த 25-ம் திகதி வியாழக்கிழமை முதல் மூன்று தினங்கள் விஞ்ஞான கணிதப் பொருட்காட்சி நடைபெற்றன. (59)

## யுனிசெவ் உதவியுடன் நூறு மலசல கூடங்கள்

(கொழும்புத்துறை)

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இவ் வருடம் யுனிசெப் நிறுவன உதவியுடன் நூறு பொதுசன மலசல கூடங்கள் அமைக்கப்படவுள்ளதாக யாழ் மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரன் அறிவித்துள்ளார்.

அமைக்கப்படவிருக்கும் இம்மலசலகூடம் ஒவ்வொன்றுக்கும் தலா 1500/- செலவிடப்படவுள்ளதாகவும், மிக வசதி குறைந்த மக்கள் வாழும் இடங்களில் இம்மலசலகூடம் அமைக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (154-ரி)

# புலிகளுடன் மோதுவதற்கு விசேட புதிய படையணி

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் சண்டையிடுவதற்கு விசேட புதிய படையணியொன்று அமைக்கப்படவுள்ளது.

இப்படையணிக்கானபயிற்சிகள் விரைவில் ஆரம்பமாகும் என்றும் இதற்காக இராணுவம் அதிரடிப்படை போன்றவற்றிலிருந்து ஆட்சேர்ப்பு நடைபெற்று வருவதாகவும் கூறப்படுகிறது.

ஸ்ரீலங்கா ஆயுதப்படையினரின் ஆட்பலம், ஆயுதபலம் போன்றவற்றையும் அதிகரிக்கும் நோக்குடனே இப்புதிய படையணி உருவாக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்படையணி பயிற்சியின் பின்னர் கிழக்கு மாகாணக் காடுகளிலுள்ள விடுதலைப் புலிகளுடன் சண்டைகளில் ஈடுபடுவார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. (ரி)

## தவக்கால நற்சிந்தனை

"சின்னஞ்சிறிய என் சகோதரருள் ஒருவனுக்கே நீங்கள் செய்தபோதெல்லாம் எனக்கே செய்தீர்கள்" (மத் 25: 40) உனக்கு அன்பு செய்வது போல் உன் அயலவனுக்கும் அன்பு செய் என்கிறார் ஆண்டவர் இறை அன்பு நம்மில் மலரவேண்டுமாயின் பிறர் அன்பு எம்மில் வளர வேண்டும். இதற்கு இன்றைய போர்க்காலம் நமக்கொரு பொற்காலம். உணவின்றி, உடையின்றி, உறையுளின்றி, நோயுற்று, சிறைப்பட்டு ஆதரவின்றி வாழும் எம் மக்களில் இறைவனைக் காண்போம்.

யோ. தார்சிசியஸ்.

### வட்டு கொத்தணி உடற் பயிற்சி

## போட்டி முடிவுகள்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டைக் கொத்தணிப் பாடசாலைகளுக்கிடையேயான உடற்பயிற்சிப் போட்டிகள் அராலி இந்துக் கல்லூரியில் வட்டுக்கோட்டை கொத்தணி உபஅதிபர் சைவப் புலவர் நா. சுந்தரத்தினம் தலைமையில் நடைபெற்றன.

இப்போட்டிகளில் பின்வரும் பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

15 வயதுக்குக் கீழ் ஆண்: 1 அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம், 2 அராலி கிழக்கு அ. மி. த. க. பாடசாலை

15 வயதுக்குக்கீழ் பெண்: (1) வட்டு. இந்துக் கல்லூரி, (2) அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம், 3. வட்டு திருஞானசம்பந்த வித்தியாலயம்.

17 வயதுக்குக்கீழ் ஆண்: (1) அராலி இந்துக் கல்லூரி, (2) வட்டு. திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்.

17 வயதுக்குக்கீழ் பெண்: 1. அராலி இந்துக் கல்லூரி, (2) அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்.

19 வயதுக்குக் கீழ் ஆண்: (1) அராலி இந்துக் கல்லூரி.

19 வயதுக்குக்கீழ் பெண்: (1) அராலி இந்துக் கல்லூரி, (2) வட்டு இந்துக் கல்லூரி, (3) வட்டு திருநாவுக்கரசு மகா வித்தியாலயம். (139)

# செய்திச்சிதறல்

### ஐந்து மாதமாக சம்பளமில்லை

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் பிராந்திய கூட்டுறவுக் கல்லூரிச் சகலதர ஊழியர்களுக்கும் கடந்த 5 மாதங்களாக எதுவித சம்பளக் கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லை என ஊழியர்கள் தெரிவித்துள்ளனர். (154)

### சேவை நலன் பாராட்டுவிழா

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை மேற்கு ஸ்ரீ விநாயகமூர்த்திப் பிள்ளையார் ஆலய அர்ச்சகர் ஸ்ரீ சோ. லோகேஸ்வர சர்மாவிற்கு ஆலய நிர்வாகத்தினரால் அண்மையில் சேவை நலன் பாராட்டுவிழா நடாத்தப்பட்டது. (154

### கார் இறக்குமதி சலுகை

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் மோட்டார் கார் இறக்குமதி செய்வதற்கு வரி விலக்கு அளிப்பதற்கு அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.

மருத்துவர்கள் பொறியியலாளர்களுக்கு இச்சலுகை ஏற்கனவே வழங்கப்பட்டிருந்தது. (159)

### பாடசாலையில் திருட்டு

(வட்டுக்கோட்டை)

சிறுடைத் துணிகளைக் களவாடுவதற்காக பாடசாலை அலுவலகக் கதவை திறந்து உள்ளே புகுந்த திரு

4-ம் பக்கம் பார்க்க;

